தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.5.2025) சென்னை, தீவுத்திடலில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் சார்பில் நடைபெறும் "தமிழ்நாடு மீன் உணவு திருவிழா 2025 ஐ திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். மூர்த்தி, அ.வெற்றியழகன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் இரா.கஜலட்சுமி, தேசிய மீன்பிடி மேம்பாட்டு வாரிய தலைமை நிர்வாகி டாக்டர் பிஜய் குமார் பெஹரா உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவர்கள் உடனிருந்தனர்.

தீவுத்திடலில் மீனவர் நலத்துறை சார்பில்

தமிழ்நாடு மீன் உணவுத் திருவிழா 2025!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்துவைத்துப் பார்வையிட்டார்!

சென்னை, ஜூன் 1-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, தீவுத்திடலில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் சார்பில் நடைபெறும் "தமிழ்நாடு மீன் உணவு திருவிழா 2025" திறந்து வைத்து பார்வையிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, தீவுத்திடலில் நேற்று முன்தினம் (30.5.2025) மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் 30.5.2025 முதல் 1.6.2025 வரை மூன்று நாட்கள் நடைபெறும் "தமிழ்நாடு மீன் உணவு திருவிழா 2025" திறந்து வைத்து பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீனவர்களின் முன்னேற்றத்திற்காக திருவெற்றியூர் புதிய சூரை மீன்பிடி துறைமுகம், பட்டினப்பாக்கம் மீன் அங்காடி, சிந்தாதிரிப்பேட்டை புதுப்பிக்கப்பட்ட மீன் அங்காடி உள்பட பொதுமக்கள் வந்து செல்ல ஏதுவாக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மீன் அங்காடிகள் அமைத்தல், மீன் இறங்கு தளங்கள், கூடுதல் படகு அணையும் தளம், படகு பழுதுபார்க்கும் தளம், அலை தடுப்புச் சுவர் அமைத்தல், தூண்டில் வளைவு அமைத்தல் என ஏராளமான வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார். அதன் ஒரு பகுதியாக பொதுமக்கள் மீன் உணவு வகைகள் குறித்து விரிவாக அறிந்து கொள்ள சென்னை தீவுத் திடலில் தமிழ்நாடு மீன் உணவு திருவிழா - 2025 நடத்த உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு மீன் உணவு திருவிழாவையொட்டி சென்னை தீவுத் திடலில் 1,00,000 சதுர அடி பரப்பளவுள்ள குளிரூட்டப்பட்ட அரங்கம் அமைக்கப்பட்டு 50 அரங்கங்கள் கொண்ட சென்னை கடல்மீன் உணவு காட்சி கூடாரம், 15 அரங்கங்களுடனான மீன்வளம் மற்றும் வண்ண மீன்கள் காட்சிக்கூடாரம், 20 அரங்கங்களுடனான மீன் உணவு கூடங்கள், செயல்விளக்க கூட்ட அரங்கு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்த உணவுத் திருவிழாவையொட்டி கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன. மேலும், சமயற்கலை மாணவர்கள் மற்றும் மீனவ மகளிருக்கு சமையல் போட்டிகளும் நடத்தப்பட உள்ளன.

கடல்மீன்கள், குறிப்பாக இறால் மீன்கள் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற புரதம் மற்றும் ஊட்டச்சத்துகள் நிறைந்த ஆரோக்கியமான உணவாக பரிந்துரைக்கப்படுகிறது. கடல்மீன்களில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம், ஐயோடின், தாதுக்கள், விட்டமின்கள் A, D, K உள்ளிட்ட பல்வேறு சத்துகள் உள்ளன. இது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். மூர்த்தி, அ.வெற்றியழகன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் இரா. கஜலட்சுமி, தேசிய மீன்பிடி மேம்பாட்டு வாரிய தலைமை நிர்வாகி டாக்டர் பிஜய் குமார் பெஹரா உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.5.2025) சென்னை, தீவுத்திடலில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் சார்பில் நடைபெறும் "தமிழ்நாடு மீன் உணவு திருவிழா 2025-ஐ திறந்து வைத்து, இறால் உணவினை 100 வகையாக சமைக்கும் முறைகள் குறித்த புத்தகத்தை வெளியிட்டார். இந்நிகழ்வில் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.மூர்த்தி, அ.வெற்றியழகன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் இரா.கஜலட்சுமி, தேசிய மீன்பிடி மேம்பாட்டு வாரிய தலைமை நிர்வாகி டாக்டர் பிஜய் குமார் பெஹரா உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவர்கள் உடனிருந்தனர்.

மதுரையில் நடைபெறும் பொதுக்குழு கூட்டத்தில்

திருப்பூர் கிழக்கு-திருப்பூர் தெற்கு மாவட்டத்தினர் பங்கேற்பீர்!

மாவட்டப் பொறுப்பாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் வேண்டுகோள்!

திருப்பூர், ஜூன் 1-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் தலைமையில் இன்று (ஜூன் 1) மதுரையில் நடைபெறும் பொதுக்குழு கூட்டத்தில் திருப்பூர் கிழக்கு திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் உள்ள பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், மு.பெ. சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக திகழும் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும், நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் இன்று (ஜூன்1-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் மதுரை, உத்தங்குடி, "கலைஞர் திடலில்" நடைபெற இருக்கும் வரலாற்று சிறப்பு மிக்க பொதுக்குழு கூட்டத்தில் திருப்பூர் கிழக்கு திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலை மைச் செயற்குழு, பொது க்க்குழு உறுப்பி னர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பொதுக்குழு சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தங்களுக்கு தலைமைக் கழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தினை நேரில் எடுத்து வந்து, மதுரையில் பொதுக் குழு நடைபெறும் திடலில் முகப்பில் அமைப்பட்டுள்ள நமது திருப்பூர் கிழக்கு திருப்பூர் தெற்கு மாவட்டத் தின் பெயர் பொறித்துள்ள கவுண்டரில் வைத் துள்ள 'மினிட்' புத்தகத்தில் கையொப்பமிட்டு தங்களுக்கென வழங்கப்பட்டுள்ள பொதுக்குழு 'பேட்ஜ்' ஐ பெற்றுக் கொண்டு, இன்று 1-ஆம் தேதி காலை 8.00 மணிக்குள் பொதுக்குழு நடைபெறும் கூட்ட அரங்கத் திற்குள் சென்று, நமது திருப்பூர் கிழக்கு திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப் பட்ட இடத்தில் அமர்ந்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொதுக்குழு கூட்டத்திற்கான அழைப்பு கடிதம் இதுவரை கிடைக்கப் பெறாத, பொதுக்குழு உறுப்பினர்கள் 1-ஆம் தேதி காலை 8.00 மணிக்கெல்லாம் மதுரையில் பொதுக் குழு நடை பெறும் திடலில் முகப்பில் அமைப்பட்டுள்ள நமது திருப்பூர் கிழக்கு திருப்பூர் தெற்கு மாவட்ட கவுண்டருக்கு நேரில் வந்து 'மினிட்' புத்தகத்தில் கையொப்பமிட்டு, 'பேட்ஜ்' ஐ பெற்றுக் கொண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் அவசியம் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மதுரையில் நடைபெறும் பொதுக்குழு கூட்டத்தில்

திருப்பூர் மத்திய மாவட்டத்தினர் பங்கேற்பீர்!

மாவட்ட கழகச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., வேண்டுகோள்!

திருப்பூர், ஜூன் 1-

திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சர், உழைப்பு! உழைப்பு!! உழைப்பு!!! என்ற ஒற்றை சொல்லை தாரக மந்திரமாகக் கொண்ட நம்முடைய உயிரினும் மேலான அன்புத்தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் இன்று (ஜூன் 1-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் மதுரை, உத்தங்குடி, "கலைஞர் திடலில்" நடைபெற இருக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பொதுக்குழு கூட்டத்தில் திருப்பூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலை மைச் செயற்குழு, பொதுக் குழுஉறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பொதுக்குழு சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தங்களுக்கு தலைமைக் கழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தினை நேரில் எடுத்து வந்து, மதுரையில் பொதுக்குழு நடைபெறும் திடலில் முகப்பில் அமைப்பட்டுள்ள நமது திருப்பூர் மத்திய மாவட்டத்தின் பெயர் பொறித்துள்ள கவுண்டரில் வைத்துள்ள 'மினிட்' புத்தகத்தில் கையொப்பமிட்டு தங்களுக்கென வழங்கப்பட்டுள்ள பொதுக்குழு 'பேட்ஜ்' ஐ பெற்றுக் கொண்டு, இன்று 1-ஆம் தேதி காலை 8.00 மணிக்குள் பொதுக்குழு நடைபெறும் கூட்ட அரங்கத்திற்குள் சென்று, நமது திருப்பூர் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொதுக்குழு கூட்டத்திற்கான அழைப்பு கடிதம் இதுவரை கிடைக்கப் பெறாத, பொதுக்குழு உறுப்பினர்கள் 1-ஆம் தேதி காலை 8.00 மணிக்கெல்லாம் மதுரையில் பொதுக்குழு நடைபெறும் திடலில் முகப்பில் அமைப்பட்டுள்ள நமது திருப்பூர் மத்திய மாவட்ட கவுண்டருக்கு நேரில் வந்து 'மினிட்' புத்தகத்தில் கையொப்பமிட்டு, 'பேட்ஜ்' ஐ பெற்றுக் கொண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் அவசியம் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் தலைமையில்

மதுரை பொதுக்குழுக் கூட்டத்தில் கோவை மாவட்டத்தினர் பங்கேற்பீர்!

மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக் - தொண்டாமுத்தூர் அ.ரவி - தளபதி முருகேசன் வேண்டுகோள்!

கோவை, ஜூன் 1-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் தலைமையில் ஜூன் 1 இன்று மதுரையில் நடைபெறும் பொதுக்குழு கூட்டத்தில் ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தில் உள்ள பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர், நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும், நம்முடைய உயிரினும் மேலான அன்புத்தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் இன்று (ஜூன் 1-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் மதுரை, உத்தங்குடி, "கலைஞர் திடலில்" நடைபெற இருக்கும் வரலாற்று சிறப்பு மிக்க பொதுக்குழு கூட்டத்தில் ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பொதுக்குழு சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தங்களுக்கு தலைமைக் கழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தினை நேரில் எடுத்து வந்து, மதுரையில் பொதுக்குழு நடைபெறும் திடலில் முகப்பில் அமைப்பட்டுள்ள நமது கோவை மாநகர் மாவட்டம், கோவை வடக்கு, கோவை தெற்கு மாவட்டத்தின் பெயர் பொறித்துள்ள கவுண்டரில் வைத்துள்ள 'மினிட்' புத்தகத்தில் கையொப்பமிட்டு தங்களுக்கென வழங்கப்பட்டுள்ள பொதுக்குழு 'பேட்ஜ்' ஐ பெற்றுக் கொண்டு, இன்று 1-ஆம் தேதி காலை 8.00 மணிக்குள் மதுரை பொதுக்குழு நடைபெறும் கூட்ட அரங்கத்திற்குள் சென்று, நமது கோவை மாநகர் மாவட்டம், கோவை வடக்கு, கோவை தெற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொதுக்குழு கூட்டத்திற்கான அழைப்பு கடிதம் இதுவரை கிடைக்கப் பெறாத, பொதுக்குழு உறுப்பினர்கள் 1-ஆம் தேதி காலை 8.00 மணிக்கெல்லாம் மதுரையில் பொதுக்குழு நடைபெறும் திடலில் முகப்பில் அமைப்பட்டுள்ள நமது கோவை மாநகர் மாவட்டம், கோவை வடக்கு, கோவை தெற்கு மாவட்ட கவுண்டருக்கு நேரில் வந்து 'மினிட்' புத்தகத்தில் கையொப்பமிட்டு, 'பேட்ஜ்' ஐ பெற்றுக் கொண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் அவசியம் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் –

முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு அறிக்கை!

நீலகிரி, ஜூன் 1-

நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கே.எம். ராஜு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இறுதி வரை திராவிட இயக்கத்தின் பாதுகாவலராக இருந்து, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரது கொள்கைகளை காத்து உழைத்து, முதுபெரும் அரசியல் தலைவராக செயலாற்றி வரலாறு படைத்தார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா ஜூன்3ம் தேதி உலக தமிழர்களால் சிறப்புடன் கொண்டாடப்பட உள்ளது.

ஜூன்- 3ம் தேதி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக அலுவலக முன்பு உள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கும், நீலகிரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு நகர - ஒன்றிய பேரூர் மற்றும் அனைத்து கிளை கழக பகுதிகளிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படங்களுக்கு மரியாதை செலுத்தி, கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும், பல்வேறு நலத்திட்ட உதவிகள், முதியோர் இல்லங்களில் உணவுகள் வழங்கி மிக சிறப்புடன் கொண்டாடிட வேண்டும்.

இதேபோல், ஜூன் மாதம் முழுவதும் ஏழை எளிய மக்கள் பெரிதும் பயனடைந்திடும் வகையில் நலத்திட்டங்கள் வழங்கியும், தலைவர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை பொதுமக்களுக்கு கொண்டு சேர்த்திடும் வகையில் பொதுக்கூட்டங்கள், தெருமுனை பிரச்சார கூட்டங்கள், உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை மாவட்டம் முழுவதும் வெகு விமர்சையாக நடத்திட வேண்டும் என மாவட்டத்திலுள்ள கழகத்தினர் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நடைபெறும் பொதுக்குழுக் கூட்டத்தில்

திருப்பூர் வடக்கு மாவட்டத்தினர் பங்கேற்பீர்!

மாவட்டப் பொறுப்பாளர் - மேயர் ந.தினேஷ்குமார் வேண்டுகோள்!

திருப்பூர், ஜூன் 1-

திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பொதுக்குழு சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தங்களுக்கு தலைமைக் கழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தினை நேரில் எடுத்து வந்து, மதுரையில் பொதுக் குழு நடைபெறும் திடலில் முகப்பில் அமைப்பட்டுள்ள நமது திருப்பூர் வடக்குமாவட்டத்தின் பெயர் பொறித்துள்ள கவுண்டரில் வைத்துள்ள 'மினிட்' புத்தகத்தில் கையொப்பமிட்டு தங்களுக்கென வழங்கப்பட்டுள்ள மதுரை பொதுக்குழு 'பேட்ஜ்' ஐ பெற்றுக் கொண்டு, இன்று (1-ஆம் தேதி) காலை 8.00 மணிக்குள் மதுரை பொதுக்குழு நடைபெறும் கூட்ட அரங்கத்திற்குள் சென்று, நமது திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொதுக்குழு கூட்டத்திற்கான அழைப்பு கடிதம் இதுவரை கிடைக்கப் பெறாத, பொதுக்குழு உறுப்பினர்கள் இன்று (1-ஆம் தேதி) காலை 8 மணிக்கெல்லாம் மதுரையில் பொதுக்குழு நடைபெறும் திடலில் முகப்பில் அமைப்பட்டுள்ள நமது திருப்பூர் வடக்கு மாவட்ட கவுண்டருக்கு நேரில் வந்து 'மினிட்' புத்தகத்தில் கையொப்பமிட்டு, 'பேட்ஜ்' ஐ பெற்றுக் கொண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் அவசியம் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா வருகின்ற ஜூன் 3ஆம் தேதியன்று நடை பெறுவதை முன்னிட்டு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம், சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து கேட்டறிந்தார். ஆய்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வேராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் பருஇரா.வைத்திநாதன் மற்றும் செய்தித் துறை உயர் அலுவர்கள் உடனிருந்தனர்.